APPENDIX I

[*Vide* answer to Starred Question No. 214 on page 8]

(1) நிதி உதவி :—இராணுவப் படையைச் சேர்ந்த முன்னுள் போர் வீரர்கள், அவர்களது குடும்பங்கள், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள், மரணமடைந்த முன்னுள் போர் வீரர்களது குடும்பங்கள், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள் ஆகியவர்களின் இடர்களைத் தீர்க்கும் நோக்கத்துடன் "தமிழ்நாட்டு முன்னுள் போர் வீரர்கள் உதவி நிதி" என்ற அறநிதி 1943-ம் ஆண்டிலேயே ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டுக் காலாட்படை, கடற்படை, விமானப்படை வீரர் வாரியத்தின் (Tamil Nadu Soldiers' Sailors and Airmen's Board) நிதித் துணைக் குழு, இந்த நிதியை நிர்வகிக்கிறது. இந்த நிதியிலிருந்து கீழ்க்கண்ட வகைகளில் உதவி கிடைக்கும் :—

1. பராமரிப்புக்கென திங்கள் தோறும் உதவி வழங்கல் ;

2. நேரிடை உதவி தேவைப்படுகிற நேர்வுகளில் இடர் உதவியை உடனடியாக வழங்குதல் ;

3. கைச் செலவுக்கென பணம் (தமிழ்நாட்டில் ஏற்பளிக்கப்பட்ட காச நோய் நலம் பேண மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறுகிற காச நோயாளிகளாக, தொழு நோயாளிகளாக உள்ள முன்னுள் போர் வீரர்களுக்கு திங்கள் தோறும் இத்தொகை வழங்கப்படும்) ;

4. இம் மாநிலத்தில் உள்ள ஏற்பளிக்கப்பட்ட காச நோய் நலம் பேண மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் காச நோயாளிகளாக, தொழு நோயாளிகளாக உள்ள முன்னுள் போர் வீரர்கள், ஆண்டில் ஒரு முறை தமது வீடுகளுக்குச் செல்வதற்கு ஆகும் போக்குவரத்துச் செலவு ;

5. ஊனமடைந்த முன்னுள் போர் வீரர்கள் போன்ற தகுதியுள்ள நேர்வுகளில், அவர்கள் வெற்றிலைப் பாக்குக் கடை வைத்தல் அல்லது கோழிப்பண்ணை நடத்துதல் போன்ற சிறிய தொழில்கள் செய்வதற்காக அவர்களுக்கு இலவச மானியங்களை ஒரு மொத்தமாக வழங்குதல்.

காச நோயாளிகளாக-தொழு நோயாளிகளாக உள்ள முன்னுள் போர் வீரர்கள் இம்மாநிலத்தில் ஏற்பளிக்கப்பட்ட நலம் பேண மருத்துவ மனைகளில் தங்களது சிகிச்சை முடித்து உடல் நலம் பெற்ற பிறகு அவர்களது மறு வாழ்விற்கென ஒருமொத்த மானியங்கள் வழங்கப்படுகின்றன.

6. தமிழ்நாட்டுக் காலாட்படை, கடற்படை, விமானப்படை, வாரியம் அவ்வப்போது முடிவு செய்கிற வட்டியுடன் தவணைகளில் திருப்பிச் செலுத்தத்தக்க குறுகிய கால கடன்கள்.

7. தேர்வுக் கட்டணங்களையும் சிறப்புச் சம்பளங்களையும் செலுத்தும் பொருட்டு, மரணமடைந்த போர் வீரர்களது குழந்தைகளுக்கு மானியங்கள் வழங்குதல்.

8. முன்னுள் போர் வீரர்களின் கைம்பெண்களுக்கும் அவர்களைச் சார்ந்த வாழ்ந்துவரும் பெண்மணிகளுக்கும் மறு வாழ்வு அளிப்பதற்கான திட்டம் அல்லது திட்டங்கள்.

9. தமிழ் நாட்டுப் போர் வீரர்களின் சிறுவர் சிறுமியரை பெங்களூர், தமிழ்நாட்டுப் பொறியியல் தொகுதி நடத்துகிற விடுதியில் அனுமதித்தல்.

10. பிற ஆதாரங்களிலிருந்து உதவி கிடைக்காவிட்டால், செயற்கைப் பல்செட், மூக்குக் கண்ணாடிகள், நன்றாகக் காது கேட்கப் பயன்படுத்தும் சாதனங்கள் இவற்றை வாங்கும் பொருட்டு முன்னுள் போர் வீரர்களுக்கு மானியங்கள்.

11. தகுதி வாய்ந்த முன்னுள் போர் வீரர்களின் பெண்களது திருமணச் செலவுகளுக்கென ரூ. 150 வரை மானியம் வழங்கல் (ஒவ்வொரு நேர்விலும் ஒரு பெண் குறித்தே அந்த மானியம் வழங்கப்படும்).

12. படைவீரர்களின் போர்ப் பிற்காலச் சீரமைப்பு நிதி என்பது 1946-ல் நிறுவப்பட்டது. முன்னாள் போர் வீரர்களின் கூட்டு நலனுக்காக அது நிறுவப்பட்டது. தமிழ்நாட்டு ஆளுநரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு அதை நிர்வகிக்கிறது. அதில் ஐந்து உறுப்பினர்கள் உள்ளனர். இந்த நிதியிலிருந்து கீழ்க்கண்ட திட்டங்களுக்கென பொதுவாக இதுவரை பணம் வழங்கப்பட்டது :—

மருத்துவ வசதிகள், காச நோய், தொழு நோய் நலம் பேண் மருத்துவ மனைகளில் பிணியாளர் பகுதிகளையும் பிணியாளர்க் குடியிருப்புகளையும் கட்டுதல், காச நோயாளிகளையும், தொழு நோயாளிகளையும் பேணி வருவதற்கான செலவுகள்.	ரூ.	11,00,000
(தற்போது கேரளாவில் உள்ள) வயநாடு நிலக் குடியேற்றத் திட்டம் உட்பட, நிலக் குடியேற்றத் திட்டங்கள் மானியங்களும் கடன்களும்.	ரூ.	53,00,000
கல்விச் சலுகைகள்—தொழிற் கல்லூரிகள் உட்பட பள்ளி, கல்லூரி மாணவர்களுக்காக கல்விக் கட்டணம், சிறப்புச் சம்பளம், புத்தகப் படிகள், உணவுக் கட்டணங்கள்.	ரூ.	77,00,000
முன்னாள் போர் வீரர்களுக்கான கூட்டுறவு மோட்டார் போக்குவரத்துச் சங்கங்கள்—கடன்கள்.	ரூ.	26,00,000
முன்னாள் போர் வீரர்களுக்கான கூட்டுறவு பணிக்களரிகள்—மானியங்களும் கடன்களும்.	ரூ.	8,00,000
பிற பல வகைத் திட்டங்கள்.	ரூ.	20,00,000
ஆக மொத்தம் ..	ரூ.	1,95,00,000

நிதிப் பற்றுக்குறை காரணமாக, மேற்குறிப்பிட்ட திட்டங்களுக்கென மானியங்கள் வழங்க மேற்கொண்டும் செலவு செய்யப்படவில்லை. 15—8—1968 அன்றைய நிலவரப்படி ரூ. 9,84,568·63 இந்த நிதியில் இருப்பு இருந்தது. இந்த நிதியில் தற்போது குறைந்த தொகையே இருப்பதால், முன்னாள் போர் வீரர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்கான கடன்கள் அனுமதிப்பது குறித்த திட்டங்களை மட்டும் தற்போது இக்குழு ஆலோசிக்கிறது.

13. முன்னாள் போர் வீரர்களை மீண்டும் குடியமர்த்துவதற்குரிய நிதி வசதியைப் பெருக்கும் பொருட்டும், நிலைபடுத்தும் பொருட்டும், இந்திய அரசு முன்னாள் போர் வீரர்கள் மறு வாழ்வுச் சிறப்பு நிதி ஒன்றைப் புதிதாக நிறுவியது. அறக் கட்டளைகள் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் அது நிறுவப்பட்டது. தேசீயப் பாதுகாப்பு நிதியிலிருந்து ரூ. 5 கோடி தொடக்கத் தொகையுடனும் முதற்கண் 1965–66 முதல் மூன்றாண்டுக் காலத்துக்கு பாதுகாப்பு நிதியிலிருந்து ஆண்டுதோறும் கிடைக்கும் தொகையுடனும் அந்த நிதி துவங்கப்பட்டது. பாதுகாப்புத் துறையின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து கிடைக்கிற பங்குகளுக்குச் சமமான இணை மானியங்களை மாநில அரசாங்கம் வழங்க வேண்டும். இம் மாநிலப் பங்கினை நிர்வகிப்பதற்காக, தமிழ்நாட்டு ஆளுநரைத் தலைவராகக்கொண்ட மாநில நிர்வாகக் குழு ஒன்று 1967 மே திங்களில் நிறுவப்பட்டது. அந்த நிதியின் நோக்கங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) ஏற்பளிக்கப்பட்ட பயிற்சி நிலையங்களில் தொழில் நுட்ப, நிர்வாகத் தொழில் அல்லது உழவு தொழிலில் பயிற்சி பெறும்பொருட்டு, முன்னாள் போர் வீரர்களுக்கு பயிற்சி உதவிப் பணம் வழங்குதல்,

25th March 1969]

(ii) முன்னாள் போர் வீரர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் குறித்த, அதாவது, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, தொழில் போக்குவரத்து முதலான திட்டங்கள் குறித்த முன்னாள் போர் வீரர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அல்லது பிற சங்கங்களுக்கு மானியங்களை அல்லது கடன்களை அனுமதித்தல்.

(iii) தொழில் நுட்ப, தொழில் அல்லது வேளாண்மைக கல்வியில் உயர்நிலைப் பள்ளி அல்லது உயர் இடைநிலைப் பள்ளிக்குப் பிறகு இந்தியாவில் மேல் படிப்பு படிப்பதற்கென முன்னாள் போர் வீரர்களைச் சார்ந்துள்ளவர்களுக்குப் படிப்பு உதவி தொகைகளை அல்லது மானிகயங்களை அனுமதித்தல்.

(iv) கூட்டுத் தன்மை வாய்ந்த சிறப்பு நடவடிக்கைகள் குறித்த செலவுக்கும், முதுமையடைந்த அனாதையாகிவிட்ட முன்னாள் போர் வீரர்களை அல்லது அவர்களது, கைம்பெண்களைப் பேணுவதற்கு ஆகும் செலவிற்கும், ஒப்பளிப்பு வழங்கல்.

(v) தொழில்களை அல்லது வாணிக நிறுவனங்களைத் துவக்கும் தனிப்பட்ட முன்னாள் போர் வீரர்களுக்குக் கடன்கள் வழங்குதல்.

(vi) முன்னாள் போர் வீரர்கள், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்கள் இவர்களது நல்வாழ்வுக்கான நடவடிக்கைகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குரிய ஏனைய எல்லாவற்றையும் செய்தல்.

மாநில நிர்வாகக் குழு இந்த நிதியிலிருந்து கீழ்க்கண்ட வகைத் திட்டங்களுக்காகப் பணம் வழங்குவதென முடிவு செய்துள்ளது:—

(1) போர்களத்தில் வீரமரணம் எய்திய அல்லது ஊன மடைந்துவிட்ட அல்லது காணமற்போனதாக அறிவிக்கப்படுகிற பாதுகாப்புப் படையினரைச் சார்ந்துள்ளவர்கள் அவர்களது குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் தொழிற பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் பொருட்டு திங்களை ஒன்றுக்கு ரூ. 45 பயிற்சி உதவிப் பணம்.

(2) முன்னாள் போர் வீரர்களின் குழந்தைகள் அவர்களைச் சார்ந்துள்ளவர்கள் ஒவ்வொருவருக்கும் தொழிற் பயிற்சி நிலையங்கலில் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறுவதற்காக திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 பயிற்சி உதவிப் பணம்.

(3) முன்னாள் போர் வீரர்கள் நோயுற்றிருப்பின் அவர்களது பயனுக்காக சாதனங்களை வாங்கும் பொருட்டு பெங்களூர் செஞ்சிலுவை இல்லத்துக்கு ரூ. 2,500 மானியம்.

(4) பூனாவில் உள்ள கமாண்டு இராணுவ மருத்துவ மனைக்கு ரூ. 3,500 மானியம்.

(5) முன்னாள் போர் வீரர்களைப் பிரிந்து விட்ட மனைவிமார்கள், கைம்பெண்கள், இவர்கள் வீட்டுக் காப்பாளர்களாக விற்பனைப் பெண்களாகப் பயிற்சி பெறுவதற்கும், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணக்கியல் இவற்றில் பயிற்சி பெறும் பொருட்டும், ஆயாக்கள், சமையல்காரிகள் முதலிய வேலைகளில் பயிற்சி பெறவும் பயிற்சி உதவிப் பணங்கள்

(6) முன்னாள் போர் வீரர்களைச் சார்ந்து வாழ்கிறவர்கள் சென்னை சமூகப் பணிகள் பள்ளியில் சமூக நல நிர்வாகத்தில் பட்ட மேற்படிப்பு படிப்பதற்கென படிப்பு உதவித் தொகைககள்.

(7) கல்விச் சலுகைகள்—முன்னாள் போர் வீரர்களின் குழந்தைகளும் அவரைச் சார்ந்தவர்களும் மருத்துவக் கல்லூரிகளில் படித்தால் அவர்களது கல்விக் கட்டணங்களையும் சிறப்புச் சம்பளத்தையும் குறித்து 1968–69 முதல் சலுகை அளித்தல்.

(8) முன்னாள் போர் வீரர்களின் கைம்பெண்கள் ஏதேனும் பயனுள்ள பயிற்சியைப் பெற விழைகிற நேர்வுகளில் அவர்களுக்கு விடுதிச் செலவுகளை வழங்குதல்.

(9) ஏற்பளிக்கப்பட்ட நிலையங்களில் தட்டச்சர்களாக அல்லது மோட்டார் வலவர்களாக மறு பயிற்சி அல்லது பயிற்சி பெற விழைகிற முன்னாள் போர் வீரர்களுக்கு நிதி உதவி.

[25th March 1969

(10) காச நோயாளிகளாக உள்ள முன்னாள் போர் வீரர் ஒவ்வொருவரும் இலவச நோயாளிகளாக அனுமதிக்கப்படுகிற வரையில் காச நோய் நலம் பேண மருத்துவ மனைகளில் உடனடியாக அனுமதித்துக் கொள்ளப்படும் பொருட்டு, அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 150 மானியம் வழங்குதல்.

(11) முன்னாள் போர் வீரர்களும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும், ஆசிரியர் பயிற்சி, குறுகிய கால ஆசிரியர் பயிற்சி, பண்டிதர்கள் பயிற்சி, உடற்பயிற்சி ஆசிரியர் பயிற்சி 'அவற்றைப் பெறுவதற்கென அவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவிப் பணம்.

முன்னாள் போர் வீரர்களது குழந்தைகளும், அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும், சட்டப் படிப்பு படித்து வருவார்களாயின் அவர்களுக்கு 1968–69 கல்வி ஆண்டு முதல் கல்விக் கட்டணத்தையும் சிறப்புச் சம்பளத்தையும் அனுமதிக்கவும் கொள்கையளவில் நிதித் துணைக் குழு ஒப்புக் கொண்டுள்ளது. முன்னாள் போர் வீரர்களின் குழந்தைகளும் அவர்களைச் சார்ந்து வாழ்பவர்களும், கல்லூரிப் புகுமுக வகுப்பு, பி.எ., பி.எஸ்.ஸி. முதலிய படிப்புகளை படித்து வந்தால் ஓராண்டுக்கு கல்விக் கட்டணத்தையும் சிறப்புச் சம்பளத்தையும் அனுமதித்து ஆண்டு இறுதியில் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கவும், அது முடிவு செய்தது. மேலும், முன்னாள் போர் வீரர்களைச் சார்ந்துள்ளவர்கள் சிறப்பு நிதியிலிருந்து படிப்பு உதவித் தொகைகளைப் பெறும் நேர்வுகளில் அவர்கள் ஏற்பளிக்கப்பட்ட விடுதிகளில் உண்மையில் தங்கியிருந்தால், புத்தகப் படியும் உணவுப் படியும் அவர்களுக்கு வழங்கத் தக்கதாகும் என்று அக்குழு முடிவு செய்தது. இந்த முடிவுகள், மாநில நிர்வாகக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

2. **வேலை ாய்ப்பு உத்வி**:—வேலை வாய்ப்பு நிலையங்கள் மூலம் அரசாங்கப் பதவிகளுக்கு ஆட்கள் தெரிந்தெடுக்கப்படுவது குறித்து, அரசாங்கம், போர்ப் பணியில் ஈடுபட்டவர்களுக்கும், முன்னாள் போர் வீரர்களுக்கும் உயர்ந்த முறை வைப்புகளை முடிவு செய்துள்ளது. அவர்கள் அரசாங்கத்தில் பணியில் சேர்வதற்கென அவர்களது வயது வரம்பு 40 ஆகத் தளர்த்தப்பட்டுள்ளது. முன்னாள் போர் வீரர்களைப் பொறுத்த வரையில் எந்த ஒரு பதவிக்காகவேனும் பிற வகையில் நியமிக்கப்பட அவர்கள் தகுதி கொண்டிருப்பின், விதிகளில் முடிவு செய்யப்பட்டுள்ள கல்வித் தகுதிகளும் தளர்த்தப்படலாம்.

3. **நில ஒப்படை**:—புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதைப் பொறுத்த வரையில் போர்களில் வீரமரணம் எய்திய போர் வீரர்களின் குடும்பங்கள் அல்லது போர்களில் காயமடைந்து ஊனமடைந்துள்ள போர் வீரர்களின் குடும்பங்கள் இவற்றிற்கு முதலிடம் வழங்கப்படுகிறது. போர் வீரர்களுக்கும் முன்னாள் போர் வீரர்களுக்கும் இரண்டாவது மூன்றாவது இடம் அளிக்கப்படுகிறது. குடும்பம் ஒவ்வொன்றுக்கும் 5 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 2½ எக்கர் நன்செய் நிலம் ஒப்படை செய்யப்படுகிறது.

APPENDIX II

[*Vide* answer to Starred Question No. 196 on page 10.]

(அ) தமிழ்நாடு 1957–ம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளைச் சேர்ந்த 53 (1) விதியின் கீழ், திரைப்பட மாளிகைக்கு வரும் கார்களை நிறுத்தி வைக்கும் பொருட்டு 6·10 மீட்டர் (20 அடி) அகலத்துக்குக் குறையாத திறந்த வெளியிடம் அதன் மூன்று பக்கங்களிலாவது இருக்க வேண்டும் அல்லது உரிமம் வழங்கும் அதிகாரி இருக்க வேண்டும் என்று கேட்கிற இன்னும் அதிக அளவு அகலத்திற்கு திறந்தவெளி இருக்க வேண்டும். ஒவ்வொரு திரைப்பட மாளிகைக்கும் வரும் கார்களின் எண்ணிக்கை மாளிகைக்கு மாளிதிகை வேறுபடுகிறது.